செ. கு. எண்: 174 நாள்: 12–05–2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.5.2012

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் வட்டம், பாம்பன் கிராமத்தைச் சேர்ந்த திரு. பௌனிராஜ் என்பவரின் மகன் திரு. கால்வின் மில்லர் 10.5.2012 அன்று இரவு ராமேஸ்வரம் அரியமான் கடற்கரையிலிருந்து நான்கு கடல் மைல் தொலைவில் நாட்டுப் படகில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட படகு விபத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த மீனவர் திரு. கால்வின் மில்லர் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான கால்வின் மில்லர் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு: –

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.